செ.வெ.எண்.78 நாள்.24.07.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக அன்புச் சுவர் சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் முன்பகுதியில் அன்புச் சுவர் சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.07.2017) தொடங்கி வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

அன்புச் சுவர் (wall of kindness) என்பது நாம் பயன்படுத்தாத நமக்கு தேவையில்லாத பொருட்களை பிறர் பயன்படும் வகையில் விட்டுச் செல்வதும், தேவைப்படுபவர்கள் தேவையானவற்றை எடுத்துச் செல்வதும் ஆகும். எனவே, இந்த அன்புச் சுவரில் நமக்கு உபயோகம் இல்லாத துணி, புத்தகங்கள், பொம்மைகள் மற்றும் இதர பொருட்களை இங்கே விட்டுச் செல்லலாம். அதனை, தேவைப்படுபவர்கள் யார் வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.

தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் முன்புறம் இன்று அன்புச் சுவர் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த அன்புச் சுவரானது பிற மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது. அன்புச் சுவரை முதன் முதலில் ஈரான் நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது, பிற மாநிலங்களில் இந்த அன்புச் சுவரானது வெற்றிகரமாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. இன்று துவக்கப்பட்ட அன்புச் சுவர் பயன்பாட்டினை பொறுத்து நமது மாவட்டத்தில் விரிவுபடுத்தப்படும். இந்த அன்புச் சுவரில் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் தங்களுக்கு தேவையற்ற பொருட்கள் மற்றும் நீங்கள் வசிக்கும் வீட்டின் அருகில் உள்ளவர்களிடமிருந்து பெற்று இந்த அன்பு சுவரில் வைத்து செல்லலாம். தாங்கள் கொண்டு வந்து சேர்க்கும் இதுபோன்ற பொருட்கள் பிறருக்கு உபயோகமாக இருக்கும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, பொதுப்பணித் துறை கட்டடம், செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.உமாதேவி மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.